# பத்திரிக்கை செய்தி

செ.வெ.எண்: 72/ஆகஸ்ட்/2011 நாள்: 30.8.2011

பொது விநியோகத்திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை களைவதற்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு கிராமத்தில் செப்டம்பர் மாதத்தின் 2ஆம் வாரத்தில் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி முதல் மதியம் 1 மணி வரை அந்த கிராமத்தில் உள்ள குடும்ப அட்டைகள், நியாயவிலை கடை சம்பந்தமான குறைகள் தீர்க்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர்கள் முன்னிலையில் கூட்டம் நடத்தப்படும். இதில் சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்க தனி அலுவலர், ஊராட்சி மன்றத்தலைவர், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், நுகர்வோர் குழுக்களின் பிரதிநிதிகள் ஆகியோர்கள் கலந்து கொள்வார்கள். மேலும் மாவட்ட ஆட்சித்தலைவரால் துணை ஆட்சியர் நிலையில் நியமிக்கப்படும் அலுவலர் ஒருவர் பார்வையாளராக இருப்பார். மேற்படி குறை தீர்க்கும் கூட்டம் 9.9.2011 அன்று கீழ்கண்ட கிராமங்களில் நடத்தப்படும்.

| வட்டம் | கிராமம் |
|---|---|
| புதுக்கோட்டை | அடப்பகாரசத்திரம்(செல்லுகுடி) |
| ஆலங்குடி | கீழக்கரும்பிரான்கோட்டை. |
| திருமயம் | துலையனூர் |
| குளத்தூர் | மண்டையூர் |
| இலுப்பூர் | திருவேங்கைவாசல் |
| கந்தர்வக்கோட்டை | மங்கனூர் |
| அறந்தாங்கி | கோவில்வயல் |
| ஆவுடையார்கோவில் | கண்ணமங்கலம் |
| மணமேல்குடி | ஏனாதி |
| பொன்னமராவதி | திருக்களம்பூர் |
| கறம்பக்குடி | கலியராயன்விடுதி |

மேற்படி கூட்டத்தில் பொதுமக்கள் குறிப்பாக குடும்ப அட்டைதாரர்கள் அந்தந்த பகுதியில் நடைபெறும் கூட்டத்தில் நியாய விலை கடைகளின் செயல்பாடுகள் மற்றும் குடும்ப அட்டைகளில் தங்களுக்குள்ள இடர்பாடுகள் குறித்து எடுத்துக்கூறி பயன்பெறலாம். இத்தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ப.மகேஸ்வரி இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**